

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டையில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை புரிந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளித்தனர். இதில் மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், நகர கழக செயலாளர் சி.வேலுச்சாமி, நகர்மன்ற தலைவர் எம்.மத்தீன், ஒன்றிய கழக செயலாளர்கள் அணிக்கடவு ச.கிரி, அடிவள்ளி எம்.எஸ்.முரளி, க.செந்தில்குமார், எஸ்.கே.எம்.தங்கராஜ், ஜி.கதிர்வேல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.பாபு, ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் மகாலட்சுமி முருகன் உள்பட தலைமை கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் 17 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், ஆக. 12 -

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு கிராம ஊராட்சிகளில் ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் 17 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் கிராமச் சாலைகளை மேம்படுத்துதல், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்தல், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல், போர்வெல் மற்றும் சிமெண்ட் தொட்டி அமைத்தல், குடிநீர் சுத்திகரிப்பு நிலை யங்கள் அமைத்தல், ஏரிகள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராம ஊராட்சிகள் மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு அரசுபோக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ.9.83 கோடி மதிப்பீட்டில் 17 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை இன்றையதினம் துவக்கி வைத்தார்.

அதன்படி தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், இருகையூர் ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.162 இலட்சம் மதிப்பீட்டில் VA சாலை முதல் சிங்கராயபுரம் வழியாக காரைக்காட்டான்குறிச்சி வழி வரை சாலை பலப்படுத்தும் பணியையும், பின்னர், காடுவெட்டாங்குறிச்சி ஊராட்சி, சிங்கராயபுரம் கிராமத்தில், 15வது நிதிக்குழு மான்யம் (சுகாதார நிதி) திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக துணை சுகாதார நிலைய கட்;டடம் கட்டும் பணியையும், அதனைத் தொடர்ந்து, நாயகனைப்பிரியாள் ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் ரூ.35.60 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டடம் கட்டும் பணியையும், பின்னர், அணைக்குடம் ஊராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் (சுகாதார நிதி) திட்டத்தின் கீழ் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பணிகளை உரிய காலத்திற்குள் தரமாகவும், விரைவாகவும் முடித்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், வானதிரையன்பட்டினம் தெற்குதெருவில் குறைந்த மின் அழுத்தத்தை சரி செய்ய மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 25KVA/11KVA திறன் கொண்ட மின்மாற்றிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து வானதிரையன்பட்டினம்; ஊராட்சியில் ரூ.53.59 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகம் முதல் பிரடையார்குளம் வரை தார்சாலை அமைக்கும் பணியையும், பின்னர், வானதிரையன்பட்டினம் ஊராட்சியில் ரூ.76.35 இலட்சம் மதிப்பீட்டில் வானதிரையன்பட்டினம் முதல் பலிசிக்குழி ரோடு வரை தார்சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் வானதிரையன்பட்டினம் துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணியையும் துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, இடையார் ஊராட்சியில் ரூ.100.53 இலட்சம் மதிப்பீட்டில் சூசையப்பர்பட்டினம் முதல் வானதிரையன்பட்டினம் வரை தார் சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து, ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் ஏந்தல் முதல் பாப்பாங்குளம் வரை தார்சாலை அமைக்கும் பணியையும், பின்னர் உடையார்பாளையம் பேரூராட்சி ராஜவீதியில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணியையும், தொடர்ந்து உடையார்பாளையம் பெருமாள் கோவில் தெரு திருக்குளத்தில் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியையும் துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு விரைவாக முடித்திட்ட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

பின்னர்,துளாரங்குறிச்சி ஊராட்சியில் ரூ.118.36 இலட்சம் மதிப்பீட்டில் துளாரங்குறிச்சி முதல் செட்டிக்குழிப்பள்ளம் வரை தார்சாலை அமைக்கும் பணியையும், தொடர்ந்து துளாரங்குறிச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.32.25 இலட்சம் மதிப்பீட்டில் 2 வகுப்பறை கட்டடம் கட்டும் பணியையும், அதனைத்தொடர்ந்து ஆமணக்கந்தோண்டி ஊராட்சியில் ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் புதுச்சாவடி முதல் பிச்னூர் வரை தார்சாலை அமைக்கும் பணியையும், பின்னர், தழுதாழைமேடு ஊராட்சி, வீரசோழபுரத்தில் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணியையும், தொடர்ந்து தழுதாழைமேடு ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ரூ.35.25 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்;டடம் கட்டும் பணிகள் என மொத்தம் ரூ.983.43 இலட்சம் மதிப்பீட்டில் 17 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குணசேகரன், பிரபாகர கன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், இரா.அண்ணாதுரை, கணேசன், பேரூர் செயலாளர் ப. கோபாலகிருஷ்ணன், பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன் திசந்தானம் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், இதர அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கரூர் ஆண்டாங்கோயில் கிழக்கு ஊராட்சிக்கு, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி குப்பைகள் சேகரிக்கும் மின்கல வாகனங்களை வழங்கி, பின்னர் தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு சீருடைகள் மற்றும் உபகரணங்களை, வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.



தி.மு.க. குவைத் அயலக அணி சார்பாக இரங்கல் கூட்டம் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவஞ்சலி "கலைஞர்102" என்கிற சாதனைப்புத்தகம் வெளியிடப்பட்டு புகழஞ்சலி செலுத்தப்பட்டது. குவைத் தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



மன்னார்குடி நகரம், 27வது வார்டு பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, தனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய பொது விநியோகக்கடை கட்டிடத்தை தொழில்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி. ராஜா மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் மோகனச்சந்திரன், நகரச் செயலாளர் வீரா.கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர மன்றத் தலைவர் மன்னை.த.சோழராஜன், துறை அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் உடன் கலந்துகொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டம்

# கீரமங்கலத்தில் STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையம்!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, ஆக. 12 -

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையத்தினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா தலைமையில் 09.08.2025 அன்று திறந்து வைத்து, மாணவர்களின் அறிவியல் சார்ந்த படைப்புகளை பார்வையிட்டார்கள்.

தமிழக அரசு மாணாக்கர்களின் கல்வி நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், அமெரிக்கன் இந்தியா அறக்கட்டளையின், STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையம் (SILC) நிறுவுவதில் ஒரு பகுதியாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் 21 ஆம் நூற்றாண் டின் திறன்களை வளர்ப்பது, அறிவியல் மனப்பான்மையை ஊக்குவித்தல் மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களிடையே நேரடி மற்றும் செயல்முறைக் கற்றலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டிஜிட்டல் ஈக்வலைசர் (DE) திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 212 அரசுப் பள்ளிகளில் செயல்படும் வகையில், மாவட்டத்தில் உள்ள வட்டார வள ஆசிரிய பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் 212 அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மேலும் சிறப்பாக செயல்படும் வட்டார வள ஆசிரிய பயிற்றுநர்களுக்கும், அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. தொழில்நுட்பக் கற்பித்தல் மாதிரி மூலம் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 212 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

ஒவ்வொரு STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையமும் (SILC) கோடிங், எந்திரவியல், மின்னணுவியல், விண்வெளி தொழில்நுட்பவியல் கருவிகள், முப்பரிமாண அச்சு இயந்திரம் மற்றும் மாதிரி உருவாக்கம் போன்ற துறைகளில் நேரடி கற்றலை எளிதாக்கும் மேம்பட்ட கருவிகளைக் கொண்டுள்ளது. இவை மாணவர்களிடையே மேற்கூறியனவற்றில் தக்க வல்லுநர்களைக் கொண்டு பயிலரங்குகளை நடத்துகின்றன. மற்றும் கூட்டு கற்றலை ஊக்குவிக்கின்றன. இது மாணவர்களை அன்றாட வாழ்வியல் சவால்களை அறிவியல் மூலம் அணுகுவதற்கு தயார் செய்கின்றது. அதன்படி, SILC கற்றல் மையத்தின் மதிப்பீடு ரூ.15 லட்சம் ஆகும்.

09.08.2025 அன்று திறந்து வைத்து, மாணவர்களின் அறிவியல் சார்ந்த படைப்புகளை பார்வையிட்டார்கள்.

தமிழக அரசு மாணாக்கர்களின் கல்வி நலனிற்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில், அமெரிக்கன் இந்தியா அறக்கட்டளையின், STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையம் (SIL.C) நிறுவுவதில் ஒரு பகுதியாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் 21 ஆம் நூற்றாண்டின் திறன்களை வளர்ப்பது, அறிவியல் மனப்பான்மையை ஊக்குவித்தல் மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களிடையே நேரடி ம செயல்முறைக் கற்றலை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டிஜிட்டல் ஈக்வலைசர் (DE) திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 212 அரசுப் பள்ளிகளில் செயல்படும் வகையில், மாவட்டத்தில் உள்ள வட்டார வள ஆசிரிய பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் 212 அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மேலும் சிறப்பாக செயல்படும் வட்டார வள ஆசிரிய பயிற்றுநர்களுக்கும், அரசு பள்ளி ஆசிரியர்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. தொழில்நுட்பக் கற்பித்தல் மாதிரி மூலம் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 212 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

ஒவ்வொரு STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையமும் (SILC) கோடிங், எந்திரவியல், மின்னணு வியல், விண்வெளி தொழில் நுட்பவியல் கருவிகள், முப்பரிமாண அச்சு இயந்திரம் மற்றும் மாதிரி உருவாக்கம் போன்ற துறைகளில் நேரடி கற்றலை எளிதாக்கும் மேம்பட்ட கருவிகளைக் கொண்டுள்ளது. இவை மாணவர்களிடையே மேற்கூறியனவற்றில் தக்க வல்லுநர்களைக் கொண்டு பயிலரங்குகளை நடத்துகின்றன மற்றும் கூட்டு கற்றலை ஊக்குவிக்கின்றன. இது மாணவர்களை அன்றாட வாழ்வியல் சவால்களை அறிவியல் மூலம் அணுகுவதற்கு தயார் செய்கின்றது. அதன்படி, SILC கற்றல் மையத்தின் மதிப்பீடு ரூ.15 லட்சம் ஆகும்.

இந்த திட்டத்தின் வழியாக வட்டார வள ஆசிரிய பயிற்றுநர்கள் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் மையமாக செயல்படுகிறது. துறை நிபுணர்களை முன் உதாரணமாக (Role Model). கொண்டு நடத்தப்படும் நிகழ்வுகள் மூலம், மாணவர்களுக்கு புதிய வழிகாட்டுதல்கள், உந்துதல் மற்றும் அனுபவங்களைப் பகிரும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

STEM கற்றல் மையத்தின் வழியாக, மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவிலான நடைபெறும் பல்வேறு போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கும் வகையில் தயாரிக்கப்பட்டு, அவர்களது திறமைகளை வெளிப்படுத்தும் சூழல் உருவாக்கப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலம் அனைத்து மாணவர்களின் STEM தொடர்பான வகுப்பறை செயல்பாடுகள், செயல்முறை அடிப்படையிலான கற்றல், சிந்தனை திறன் வளர்ச்சி, குழுவாய்ந்த பணிகள், திட்டமிடல் மற்றும் கண்டுபிடிப்பு திறன்களை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, இதர செயல்பாடுகளின் மதிப்பீடு ரூ.35 லட்சம் ஆகும்.

அந்த வகையில், கீரமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், STEM கண்டுபிடிப்பு மற்றும் கற்றல் மையத்தினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா, தலைமையில் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இணை இயக்குநர்கள் முனைவர் வை.குமார் (ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி), மா.இராம கிருஷ்ணன் (மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்), முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், அமெரிக்கன் இந்தியா பவுண்டேஷன் டிஜிட்டல் ஈக்வலைசர் திட்ட இயக்குநர் டாக்டர்.பாஸ்கரன் தீனதயாளன், ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, மாவட்ட கல்வி அலுவலர்கள் சி.மாயகிருஷ்ணன் (அறந்தாங்கி), ஆரோக்கியராஜ் (இடைநிலை) கலாராணி (தொடக்கக் கல்வி), கார்த்திகேசன் (தொடக்கக் கல்வி), கீரமங்கலம் பேரூராட்சித் தலைவர் சிவக்குமார், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், உதவித் திட்ட அலுவலர் செந்தில், மாவட்ட சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சாலை செந்தில், கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் அ.சுந்தரராஜன், பள்ளித் துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குரு மாரிமுத்து, இளையராஜா, பள்ளி தலைமையாசிரியர் ராஜேந்திரன் மற்றும் வே. ராஜேஷ், டி.தங்க மணி, சண்முகநாதன், தலைமையாசியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

## அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தலைமையில்!





திருச்செந்தூர், ஆக.12 -

முதலமைச்சர்- கழகத் தலைவர் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

அந்த வகையில் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான சமூக வலைதளப் பயிற்சி மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில், மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு முன்னிலையில் 10.08.2025 அன்று நடைபெற்றது. மாவட்ட அமைப்பாளர் பை.மு.ராமஜெயம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில், சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூரத்தி அவர்களும், சமூக வலைதளத்தை ஆக்கப் பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் அவர்களும் பயிற்சி அளித்தனர்.